**இந்து கலாசார நிதியம் - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்து கலாசார நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய பொழிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1985 இன் 31 ஆம் இலக்க இந்து கலாசார நிதியச் சட்டத்தின் | | | |
| (i) | 06 ஆம் பிரிவின் 2(I) இன் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகள் | மானியம், பரிசுகள் மற்றும் நன்கொடை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) என்ற வழிகளிலிருந்து ஆண்டின் நிதியத்திற்குக் கிடைக்கின்ற நிதியத்தை அதிகரிக்கச் செய்தல், பணிப்பாளர் சபையின் பணியாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் அதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | புதிய அலுவலகத்திற்கு வருகை தரும் செயற்பாடுகள் மற்றும் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 6 ஆம் பிரிவின் 2 (I) இன் பிரிவின் (இ), (ஈ) | இந்து மத மற்றும் கலாசாரத்திற்காக முக்கியமான விரிவுரைகள் செயலமர்வுகள், வகுப்புக்கள், விவாதங்கள், | உரிய நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் (உ) பந்திகள் | கலந்துரையாடல்கள் மற்றும் சுற்றுப்பயணங்கள் போன்ற மத மற்றும் கலாசாரப் போட்டிகள், பரிசளித்தல், சான்றிதழ் பத்திரங்கள் கையளித்தல் போன்ற செயற்பாடுகள் நிதியத்தினால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அறிவிக்கப்பட்டுள்ளது . | |
| (iii) | 3 ஆம் பிரிவின் 11 ஆம் பந்தி | நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குபடுத்துதல் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காக ஒரு பணிப்பாளர் சபைக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய பிரகாரம் ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கைகள் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படாதிருந்தது டன் ஆண்டிற்காக நடாத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த கூட்டங்களின் எண்ணிக்கையை உள்ளடக்கி சட்டத்தை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறிப் பிடப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது . | குறித்துரைத்த பிரகாரம் நிருவாக சபைக் கூட்டங்களை நடாத்துவதன் மூலம் நிதியத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,989,419 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,097,733 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,108,314 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு இந்துக் கோயில்களை மறுசீரமைப்பதற்காக வழங்கப்படுகின்ற நிதி உதவித் தொகை அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது இந்துக் கோயில்கள் மற்றும் நிறுவனங்களுக்கான நிதி உதவியாக ஒதுக்கப்பட்ட ரூபா 10,000,000 நிதி ஏற்பாட்டில் ரூபா 3,100,000 மற்றும் நவராத்திரி விழாவிற்காக இந்து அறநெறி பாடசாலைகளுக்கு நிதி உதவியாக ஒதுக்கப்பட்ட ரூபா 1,200,000 தொகையில் ரூபா 535,000 என்பன அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 50 இந்து சிறுவர் இல்லங்களுக்காக ரூபா 1,000,000 நிதி உதவி வழங்குவதற்கு நிதி ஏற்பாடு செய்யப்பட்ட தொகையில் ஒரு சிறுவர் இல்லத்திற்காக மாத்திரம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 750,000 தொகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய மதிப்பீடு, கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரதிகள் போன்றவை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | புதிய அலுவலகத்திற்கு வருகை தரும் நடவடிக்கைகள் இடம்பெற்றமையினால் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய மதிப்பீடு, கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரதிகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ளல் மாவட்ட செயலாளர்களால் மேற்கொள்ளப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 20,600,000 நிதி ஏற்பாட்டின் மூலம் அமுல்படுத்துவதற்கு எதிர் பார்க்கப்பட்ட இந்து கல்விசார் மற்றும் கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள் 11 மற்றும் ரூபா 1,000,000 நிதி ஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மலைநாட்டு தொழிலாளர் சமூகத்திற்கான இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய அலுவலகத்திற்கு வருகை தரும் நடவடிக்கைகள் மற்றும் கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் கிரிமுக்கண்டி கோயிலில் எதிர்பார்க்கப்பட்ட ரூபா 15,000,000 நிதி உதவித் தொகை கிடைத்திருந்த போதிலும் அதில் ரூபா 8,000,000 மீண்டும் கோயிலை அழகுபடுத்துவதற்காக (Beautification) வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய மதிப்பீடு, அங்கீகரிக்கப்பட்ட திட்டம் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும், உரிய பணிகள் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக கள மேற்பார்வைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 15,000,000 உதவித் தொகையொன்று உரிய கோயிலில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதுடன் ரூபா 8,000,000 தொகை கோயிலை அழகுபடுத்தும் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டு மிகுதித் தொகை நிதியத்தின் ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நிதி உதவி வழங்குதல் மாவட்ட செயலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் உரிய தகவல்கள் அதனுடன் சமர்ப்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது அதற்குரிய மதிப்பீடு மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அது தொடர்பான மேற்பார்வை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கொடி தின வருமானம் ரூபா 3,000,000 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நிதி உதவி ரூபா 4,000,000 மற்றும் கலை நிகழ்ச்சிகள் சார்ந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ரூபா 2,000,000 ஆக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான வேலைத்திட்டமொன்று தயாரிக்காமையின் காரணமாக அந்த வருமானம் முழுமையாகவும், எதிர்பார்க்கப்பட்ட புத்த விற்பனை வருமானமான ரூபா 2,800,000 தொகையில் ரூபா 1,310,424 தொகை அதாவது 47 சதவீதத்தையும் உழைப்பதற்கு முடியாதிருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக கொடி தினம் மற்றும் கலை அலுவல்கள் சார்ந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் வருமானங்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 877(1) (இ) இன் பிரகாரம் நிதியமொன்று எதிர்வரும் ஆண்டிற்கான பாதீட்டிற்காக உரிய அமைச்சு செயலாளரினதும் அமைச்சரினதும் அங்கீகாரத்தைப் பெற்று, நடப்பாண்டின் செப்டெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் பாதீடு 2023 சனவரி 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் குறித்துரைத்த காலப் பகுதியில் சமர்ப்பிக்கப்படுமென குறிப்பிடுகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய கால எல்லையில பாதீட்டை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |